# செய்திமடல் தொகுதி - 04 இல - 04

ஏப்ரல் 2025

# ராமகிருஷ்ண மிஷன், மட்டக்களப்பு



குணத்தையோ குற்றத்தையோ எங்கு விவாதித்தாலும் அங்கிருக்கும் ஒவ்வொருவருக்கும் அதில் சிறிதளவாவது பங்கு வந்து சேர்ந்து விடும்.

**-தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியார்.**

🙏 **பிரார்த்தனை** 🙏

அம்மா! பிறர் குற்றம் பார்க்காத மனதை எனக்குத் தந்தருள வேண்டும் தாயே!

## சித்திரைப் புத்தாண்டு





புது வருடப்பிறப்பை முன்னிட்டு, பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் ஆலயத்தில் காலை 5.30 மணி முதல் 7.15 மணி வரை விசேட பூஜை மற்றும் பஜனை நிகழ்வுகள் நடைபெற்றன. நிகழ்வில் கலந்துகொண்ட பக்தர்களுக்கு சுவாமிஜி அவர்கள் ஆசீர்வாதமும், பிரசாதமும் வழங்கினார்கள். அதன் பின்னர் இல்ல மாணவர்களின் குழுப் புகைப்படம் எடுக்கப்பட்டது.

## உறுகாமம் வயல் பூஜை



18.04.2025 அன்று, எமது ராமகிருஷ்ண மிஷனிற்கு சொந்தமான உறுகாமம் வயல் காணியில், சிறுபோக நற்செய்கைக்கான பூமி பூஜை மற்றும் விநாயகர் வணக்கத்துடன் வேலைகள் இனிதே ஆரம்பிக்கப்பட்டன.







# சித்திரைக் கொண்டாட்டம்

## ஆண்கள் இல்ல மாணவர்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள்



புதுவருடப் பிறப்பை முன்னிட்டு 14.04.2025 நடைபெற்ற சித்திரைக் கொண்டாட்டத்தில் இல்ல மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு அதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சுவாமிஜி அவர்களினால் பரிசில்கள் வழங்கப்பட்டன.

## சித்திரைக் கொண்டாட்டம்
## பெண்கள் இல்ல மாணவிகளிடையே விளையாட்டுப் போட்டிகள்

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு 14.04.2025 அன்று நடைபெற்ற சித்திரைக் கொண்டாட்டத்தின் போது, சாரதா இல்ல மாணவிகளுக்காக விளையாட்டுப் போட்டிகள் ஒழுங்குபடுத்தப்பட்டன. இதில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவிகளுக்கு, சுவாமிஜி அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன.



## மட்டக்களப்பு, கல்லடி வேலூர் பத்ரகாளி அம்மன் ஆலய தரிசனம்

07.04.2025 அன்று மட்டக்களபு கல்லடி வேலூர் அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளி அம்மன் தேவஸ்தான வருடாந்திர திருச்சடங்கில், சுவாமிஜி மற்றும் இல்ல மாணவர்கள் பக்திபூர்வமாக கலந்துகொண்டு அம்பாள் சன்னிதியில் பஜனைப் பாடல்கள் பாடி, அம்பாளை தரிசனம் செய்தனர்.



## பேச்சியம்பாளின் திருவுவருச்சிலை ஊர்வலம்

கல்லடி உப்போடை பேச்சியம்மன் ஆலய கும்பாபிஷேக நிகழ்வை முன்னிட்டு, 27.04.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று அம்பாளின் திருவுருவச் சிலை ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டது. அந்த ஊர்வலத்தின் போது, அம்பாள் திருவுருவச் சிலை எமது ராமகிருஷ்ண மிஷனுக்கும் வருகை தந்தது. சுவாமிஜி அவர்கள், இல்ல மாணவர்கள், மற்றும் பக்தர்கள் அம்பாளை வரவேற்று, ஆரத்தி செய்து வழிபட்டனர். அதேபோல், வருகை தந்த பக்தர்களுக்காக தாகசாந்தி ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது.









## பேச்சியம்மன் கோயில் கும்பாபிஷேகக் கிரியைகளுக்கு ராமகிருஷ்ண மிஷன் துறவிகளின் விஜயம்



கல்லடி உப்போடை அருள்மிகு பேச்சியம்மன் கோயிலில் நடைபெற்ற கும்பாபிஷேகக் கிரியைகளில், கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த மூத்த துறவி, வணக்கத்திற்குரிய சுவாமி ராஜேஸ்வரானந்தஜி மகாராஜ் அவர்களும், மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் துறவிகளும் கலந்து கொண்டனர்.

## மாணவர்கள் பேச்சியம்மன் கோயில் விஜயம்

பேச்சியம்மன் கோயில் கும்பாபிஷேக நிகழ்வுகளை முன்னிட்டு, 28.04.2025 திங்கட்கிழமை அன்று, இல்லத்திலிருந்து 9 நதிகளின் தீர்த்தம் எடுத்துச் செல்லப்பட்டது. அத்துடன் 01.05.2025 வியாழக்கிழமை அன்று, சீர் கொண்டு செல்லும் வைபவம் சுவாமி நீலமாதவானந்தஜி மகராஜ் அவர்களின் தலைமையில் பக்தி, சிரத்தையுடன் இடம்பெற்றது. இதில் ஆண்கள் இல்ல மாணவர்களும், சாரதா இல்ல மாணவிகளும், பழைய மாணவர்கள், பக்தர்கள் ஆகியோர்கள் பங்கேற்றனர்.



# ஐக்கிய வணக்கம்/பூரணை தினம்














12.04.2025 அன்று எமது ராமகிருஷ்ண மிஷனில் பூரணை தின நிகழ்வுகள் ஆன்மிக உணர்வோடும் மகிழ்ச்சியோடும் சிறப்பாக அனுசரிக்கப்பட்டன. நிகழ்வின் தொடக்கமாக, இல்ல மாணவர்கள் பக்திபூர்வமான பஜனை மற்றும் ஆரத்தி நிகழ்த்தினர். பின்னர், இல்ல மாணவ-மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள், மேலும் ராமகிருஷ்ண மிஷன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இனிதே இடம்பெற்றன.

நிகழ்வின் முக்கிய அம்சமாக, சுவாமி நீலமாதவானந்தஜி மகராஜ் அவர்களின் ஆன்மிக உரை, அதனைத் தொடர்ந்து சுவாமி உமாதீஷானந்தஜி அவர்களின் ஆன்மிக உரையும் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சுமார் 420 பேர் – பெற்றோர்கள், பக்தர்கள் மற்றும் குருகுலத்தின் பழைய மாணவர்கள் – பங்கேற்றனர்.

# விஞ்ஞானப் பயிற்சி வகுப்புகள் – ஏப்ரல் மாதம்











எமது விஞ்ஞான ஆய்வு கூடத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் பயிற்சி வகுப்புகள் நடைபெறும் வழமை உள்ளது. அதேபோல், ஏப்ரல் மாதத்திலும் இவ்வாறான பயிற்சி வகுப்புகள் இடம்பெற்றன. இதில் மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக இரசாயனவியல் பரிசோதனைகளை செய்து பார்த்து அனுபவம் பெற்றனர்.












# ஜீவனானந்த சமூக சேவைத்திட்டம்

## வாகரை, குடும்பிமலை, கோரகல்லிமடு கிரான் விவேகானந்தா நலன்புரி நிலையத்தில் மருத்துவமுகாம்கள்









ஏப்ரல் 2025 இல் கொக்குவில், கிரிமிச்சோடை மற்றும் மதுரங்கேணிக்குளம் ஆகிய இடங்களில் நடைபெற்ற எங்களுடைய மருத்துவ முகாம்களில் 33 நோயாளிகளும் மட்டப்புல் தோட்டம், பெரியவட்டவான் மற்றும் குடும்பிமலை ஆகிய இடங்களில் நடைபெற்ற எங்களுடைய மருத்துவ முகாம்களில் 22 நோயாளிகளும் கிரான் விவேகானந்தா நலன்புரி நிலையத்தில் 504 நோயாளிகளும் பயனடைந்தனர்.







# ஜீவனானந்த சமூக சேவைத்திட்டம்

## வாகரை, ஈரளக்குளம், குடும்பிமலை, கோரகல்லிமடு கிரான் விவேகானந்தா நலன்புரி நிலையத்தில் அறநெறிப்பாடசாலை வகுப்புகள்







ஏப்ரல் 2025 இல் கொக்குவில் அறநெறிப் பாடசாலையில் 20 மாணவர்களும் மதுரங்கேணிக்குளம் அறநெறிப் பாடசாலையில் 25 மாணவர்கள் ஈரளக்குளம் அறநெறிப் பாடசாலையில் 20 மாணவர்களும் குடும்பிமலை அறநெறிப் பாடசாலையில் 24 மாணவர்களும் கிரான் விவேகானந்தா நலன்புரி நிலையத்தில் 40 மாணவர்களும் வருகை தருகின்றனர்.

## காரைதீவு சாரதா நலன்புரி நிலையம் மருத்துவமுகாம் மற்றும் சத்சங்கம்



காரைதீவில் உள்ள சாரதா நலன்புரி நிலையத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் மருத்துவ சேவை இடம்பெறுவது வளமை. ஏப்ரல் 2025 இல் நடைபெற்ற எங்களுடைய மருத்துவ சேவையில் 46 நோயாளிகள் பயனடைந்தனர். இங்கு ஒவ்வொரு செவ்வாய்க் கிழமைகளிலும் சத்சங்கம் இடம்பெறுகின்றது.

# விவேகானந்த மனிதவள மேம்பாட்டு நிலையம்

## ராமகிருஷ்ண மிஷன், மட்டக்களப்பு

நமது மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷனில் உள்ள விவேகானந்த மனிதவள மேம்பாட்டு நிலையத்தில் பின்வரும் சான்றிதழ் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. இவ் வகுப்புகள் சிறந்த வல்லுனர்களால் பயிற்றுவிக்கப்படும். மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்க - 0750922595


















| சிங்களம் | ஆங்கிலம் | கணினி/ஆபீஸ் 365 |
|---|---|---|
| சனி மாலை 4-6<br>ஞாயிறு மாலை 4-6 | சனி காலை 8-10<br>ஞாயிறு காலை 8-10 | சனி காலை 10-12<br>ஞாயிறு காலை 10-12 |
| **வயலின்** | **மிருதங்கம்** | **கர்நாடக சங்கீதம்** |
| சனி காலை 8-10<br>ஞாயிறு மாலை 4-6 | செவ்வாய் மாலை 4-6<br>வியாழன் மாலை 4-6 | புதன் மாலை 4-6<br>வெள்ளி மாலை 4-6 |
| **பண்ணிசை** | **பரதநாட்டியம்** | **சித்திரம்** |
| சனி காலை 8-10<br>ஞாயிறு காலை 8-10 | வெள்ளி மாலை 4-6<br>ஞாயிறு மாலை 5-6 | வெள்ளி மாலை 4-6<br>சனி மாலை 4-6 |

| யோகா | கராத்தே |
|---|---|
| சனி காலை 6:30-8 a.m.<br>ஞாயிறு காலை 6:30-8 a.m. | சனி மாலை 4:30-6<br>ஞாயிறு மாலை 4:30-6 |

# புதிய வெளியீடு




**வித்தகத்துறவி சுவாமி விபுலானந்தர்** - சுவாமி விபுலானந்தரின் துறவற நூற்றாண்டை முன்னிட்டு சிறுவர்களுக்காக வெளியிடப்பட்டிருக்கும் நூல், சென்னை ராமகிருஷ்ண மடத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ளது. இதனை எழுதியவர் சுவாமி நீலமாதவானந்தர்

**சலுகை விலை :-ரூ 50/-**




**சிறுவர்களுக்கு விபுலானந்தர்** - சுவாமி விபுலானந்தரின் துறவற நூற்றாண்டை முன்னிட்டு சிறுவர்களுக்காக வெளியிடப்பட்டிருக்கும் நூல், சென்னை ராமகிருஷ்ண மடத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ளது. இதனை எழுதியவர் சுவாமி நீலமாதவானந்தர்

**சலுகை விலை :-ரூ 50/-**




**பஜனாஞ்சலி** - மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷனால் வெளியிடப்பட்ட இப் புத்தகம் எங்கள் ஆன்மீக புத்தக நிலையத்தில் கிடைக்கிறது.

**சலுகை விலை :-ரூ 300/-**




**தெய்வத் திருமூவர் வாழ்க்கையும் சிந்தனைத் துளிகளும்** - சுவாமி விபுலானந்தரின் துறவற நூற்றாண்டை முன்னிட்டு சிறுவர்களுக்காக வெளியிடப்பட்டிருக்கும் நூல், சென்னை ராமகிருஷ்ண மடத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ளது. இதனை எழுதியவர் சுவாமி நீலமாதவானந்தர்

**சலுகை விலை :-ரூ 50/-**



RAMAKRISHNA MISSION

Ramakrishna Mission, Batticaloa
Centenary - 1926 - 2026 . 100 Years and Beyond

# ராமகிருஷ்ண மிஷன்

## விழா நாட்காட்டி - 2025-26

### ஏப்ரல் 2025

| | | |
|---|---|---|
| 14 | திங் | தமிழ் வருடப் பிறப்பு |
| 24 | வியா | ஏகாதசி |

### மே

| | | |
|---|---|---|
| 02 | வெள் | ஸ்ரீ சங்கர ஜெயந்தி / ஸ்ரீ ராமானுஜர் ஜெயந்தி |
| 08 | வியா | ஏகாதசி |
| 12 | திங் | வெசாக் / ஐக்கிய வணக்கம் |
| 23 | வெள் | ஏகாதசி |

### ஜூன்

| | | |
|---|---|---|
| 06 | வெள் | ஏகாதசி / மாணவர் இல்லம் ஆரம்ப தினம் |
| 10 | செவ் | ஐக்கிய வணக்கம் |
| 22 | ஞாயி | ஏகாதசி |

### ஜூலை

| | | |
|---|---|---|
| 06 | ஞாயி | ஏகாதசி |
| 10 | வியா | குரு பூர்ணிமா & ஐக்கிய வணக்கம் |
| 21 | திங் | ஏகாதசி |
| 22 | செவ் | சுவாமி ராமகிருஷ்ணானந்த ஜெயந்தி |

### ஆகஸ்ட்

| | | |
|---|---|---|
| 05 | செவ் | ஏகாதசி |
| 08 | வெள் | ஐக்கிய வணக்கம் |
| 09 | சனி | சுவாமி நிரஞ்ஜனானந்த ஜெயந்தி |
| 16 | சனி | ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி |
| 19 | செவ் | ஏகாதசி |
| 22 | வெள் | சுவாமி அத்வைதானந்த ஜெயந்தி |
| 27 | புதன் | விநாயக சதுர்த்தி |

### செப்டம்பர்

| | | |
|---|---|---|
| 03 | புதன் | ஏகாதசி |
| 07 | ஞாயி | ஐக்கிய வணக்கம் |
| 15 | திங் | சுவாமி அபேதானந்த ஜெயந்தி |
| 17 | புதன் | ஏகாதசி |
| 21 | ஞாயி | சுவாமி அகண்டானந்த ஜெயந்தி |
| 22 | திங் | நவராத்திரி ஆரம்பம் |
| 28 | திங் | மஹா சப்தமி |
| 30 | செவ் | மஹா அஷ்டமி சிறப்பு பூஜை |

### அக்டோபர்

| | | |
|---|---|---|
| 01 | புதன் | மஹா நவமி |
| 02 | வியா | விஜய தசமி & ஏடு தொடங்குதல் |
| 03 | வெள் | ஏகாதசி |
| 06 | திங் | ஐக்கிய வணக்கம் |
| 17 | வெள் | ஏகாதசி |
| 20 | திங் | தீபாவளி / காளி பூஜை |
| 22 | புதன் | கந்த சஷ்டி ஆரம்பம் |

### நவம்பர்

| | | |
|---|---|---|
| 02 | ஞாயி | ஏகாதசி / சுவாமி சுபோதானந்த ஜெயந்தி |
| 04 | செவ் | சுவாமி விஞ்ஞானானந்த ஜெயந்தி |
| 05 | புதன் | ஐக்கிய வணக்கம் |
| 15 | சனி | ஏகாதசி |
| 29 | சனி | சுவாமி பிரேமானந்த ஜெயந்தி |

### டிசம்பர்

| | | |
|---|---|---|
| 01 | திங் | ஏகாதசி |
| 04 | வியா | கார்த்திகை தீபம் / ஐக்கிய வணக்கம் |
| 11 | வியா | அன்னை ஸ்ரீ சாரதா தேவி ஜெயந்தி |
| 15 | திங் | ஏகாதசி / சுவாமி சிவானந்த ஜெயந்தி |
| **24** | **புதன்** | **நத்தார் தினம்** |
| 26 | வெள் | சுவாமி சாரதானந்த ஜெயந்தி |
| 31 | புதன் | ஏகாதசி |

### ஜனவரி 2026

| | | |
|---|---|---|
| 01 | வியா | கல்பதரு நாள் |
| 02 | வெள் | ஐக்கிய வணக்கம் / சுவாமி துரியானந்த ஜெயந்தி |
| 10 | சனி | சுவாமி விவேகானந்த ஜெயந்தி |
| 14 | புதன் | ஏகாதசி / தைப் பொங்கல் |
| 20 | செவ் | சுவாமி பிரம்மானந்த ஜெயந்தி |
| 22 | வியா | சுவாமி திரிகுணாதீதானந்த ஜெயந்தி |
| 29 | வியா | ஏகாதசி |
| 31 | சனி | சாரதா மகளிர் இல்லம் ஆரம்ப தினம் |

### பெப்ரவரி

| | | |
|---|---|---|
| 01 | ஞாயி | ஐக்கிய வணக்கம் / சுவாமி அத்புதானந்த ஜெயந்தி |
| 13 | வெள் | ஏகாதசி |
| 15 | ஞாயி | மகா சிவராத்திரி |
| 19 | வியா | பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண ஜெயந்தி |
| 27 | வெள் | ஏகாதசி |

### மார்ச்

| | | |
|---|---|---|
| 03 | செவ் | ஐக்கிய வணக்கம் / ஸ்ரீ சைதன்ய ஜெயந்தி |
| 07 | சனி | சுவாமி யோகானந்த ஜெயந்தி |
| 15 | ஞாயி | ஏகாதசி |
| 27 | வெள் | ராமநவமி |
| 29 | ஞாயி | ஏகாதசி |

### ஏப்ரல்

| | | |
|---|---|---|
| 01 | புதன் | ஐக்கிய வணக்கம் |
| 13 | திங் | ஏகாதசி |
| 14 | செவ் | தமிழ் வருடப் பிறப்பு |

தினசரி காலை ஆரதி / பூஜை 5.30 மணி முதல் - 6.15 மணி வரை மாலை ஆரதி 6.30 மணி முதல் - 7.15 மணி வரை வெள்ளிக்கிழமை பஜனை மாலை 6 மணி முதல் இடம்பெறும்.

ஏகாதசி நாட்களில் மாலை ஆரதிக்கு முன்னர் ராமநாம சங்கீர்த்தனம், ஞாயிறு தோறும் அமுத மொழிகள் வகுப்பு, நேரடி சீடர்களின் ஜெயந்தி மற்றும் விசேட தினங்களில் மாலை ஆரத்திக்குப் பின் சொற்பொழிவு, பக்தர்களின் இல்லங்களில் மாதாந்த சத்சங்கமும் நடைபெறும்.

ராமகிருஷ்ணபுரம், மட்டக்களப்பு. 065 222 2752 075 944 5309 batticaloa@rkmm.org

# இல்ல மாணவர்களிற்கு உணவு நன்கொடை விபரம்

"உணவு பரம்பொருளாகும்" - தைத்திரீய உபநிடதம்

### காலை உணவு & பால் தேநீர்

120

குழந்தைகளுக்கு ஒரு தினத்திற்கு தேவைப்படும் தொகை: ***18,000/-***

### மதிய உணவு

120

குழந்தைகளுக்கு ஒரு தினத்திற்கு தேவைப்படும் தொகை: ***28,800/-***

### இரவு உணவு

120

குழந்தைகளுக்கு ஒரு தினத்திற்கு தேவைப்படும் தொகை: ***18,000/-***

### ஒரு நாள் முழுவதற்குமான உணவு(மாலை நேர சிற்றுண்டி, தேனீர் உள்ளடங்கலாக)

120

குழந்தைகளுக்கு ஒரு தினத்திற்கு தேவைப்படும் தொகை: ***76,800/-***

### சிறப்பு மதிய உணவு

120

குழந்தைகளுக்கு ஒரு தினத்திற்கு தேவைப்படும் தொகை: ***42,000/-***

### போயா தினத்திற்கான உணவு

420

நபர்களிற்கு தேவைப்படும் தொகை ***105,000/-***

## <u>நன்கொடை விபரம்</u>


**நன்கொடை அளிப்பதற்குத் தொடர்பு கொள்ளவும் :**

**batticaloa@rkmm.org**

**+94 65 222 2752**


**'Ramakrishna Mission, Batticaloa'**

**கணக்கு எண் : 2698511**

**வங்கி: Bank of Ceylon, Batticaloa Branch**

**Swift Code: BCEYLKLX**

**Branch Id: 012**

**முகவரி: Covington Road, Batticaloa 30000, Sri Lanka**

# கர்மயோகம்

## குணத்தின் மீது செயலின் விளைவு

தொடர்ச்சி............

நமது தகுதி என்ன, நம்மால் எதை ஏற்றுக்கொள்ள முடியும் என்பதை நமதுசெயல்தான் நிர்ணயிக்கிறது. நாம் இன்று இப்படி இருப்பதற்கு நாமே பொறுப்பு. இனி எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறோமோ, அப்படி நம்மைச் செய்து கொள்வதற்கான ஆற்றலும் நம்மிடம் உள்ளது. இப்போதைய நமது நிலைக்கு முன்வினைப் பயன்களே காரணம் என்றால், எதிர்காலத்தில் நாம் எப்படி இருக்க வேண்டும் என்பது இப்போதைய நமது செயல்களுக்கு ஏற்பவே அமையும் என்பதும் உறுதி. எனவே செயல் புரிவது எப்படி என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

“எவ்வாறு வேலை செய்ய வேண்டும் என்று தெரிந்து கொள்வதால் என்ன பயன்? ஒவ்வொருவரும் இந்த உலகத்தில் ஏதாவது ஒரு வழியில் வேலைகள் செய்து கொண்டுதானே இருக்கிறார்கள்!' என்று கேட்கலாம். ஆனால் ஆற்றல்களை வீணடிப்பது என்று ஒன்று இருக்கிறது. சாதுரியமாகவும், ஒரு விஞ்ஞானம் போல் நுணுக்கமாகவும் செயல்புரிவதே கர்மயோகம் என்று பகவத்கீதை கூறுகிறது. எப்படிச் செய்ய வேண்டும் என்று தெரிந்து செய்வதன் மூலம் ஒருவன் பெரிய பலன்களை அடைவான்.

அனைத்து செயல்களும் நம் மனத்துள் ஏற்கனவே இருக்கின்ற ஆற்றலை வெளியே கொண்டு வருவதற்கான, ஆன்மாவை விழிப்புணர்த்துவதற்கான முயற்சிகள் மட்டுமே என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். ஆற்றல் மனிதனுள் இருக்கிறது. அதுபோலவே அறிவும் அவனுள்ளேயே இருக்கிறது. அவற்றை வெளியே கொண்டுவருவதற்காக, இந்த மாமனிதர்களை விழிப்புணர்த்துவதற்காகத் தரப்படும் அடிபோன்றதே பல்வேறு செயல்கள்.

பல்வேறான பலன்களைக் கருதி மக்கள் செயல் புரிகிறார்கள். பலன் கருதாமல் செய்யப்படுகின்ற செயல்களே இல்லை. சிலர் புகழை விரும்புகிறார்கள், அவர்கள் புகழிற்காக வேலை செய்கிறார்கள். சிலர் பணத்தை விரும்புகிறார்கள், அவர்கள் பணத்திற்காக வேலை செய்கிறார்கள். சிலருக்கு அதிகாரம் வேண்டும், அவர்கள் அதற்காக வேலை செய்கிறார்கள். வேறு சிலர் சொர்க்கத்தை விரும்புகிறார்கள், அவர்கள் அதற்காக வேலை செய்கிறார்கள். சிலர் சீன நாட்டினரைப் போல், தாங்கள் இறந்த பிறகும் தங்கள் பெயர் நிலைத்து நிற்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். இறந்த பின் அல்லாமல் சீனாவில் யாரும் எந்தப் பட்டமும் பெற முடியாது. எப்படிப் பார்த்தாலும் நாம் செய்வதை விட அது நல்லது தான். அங்கே ஒருவர் மிக நல்ல காரியம் ஏதாவது செய்தால் இறந்து போன அவரது தந்தைக்கோ பாட்டனாருக்கோ ஒரு கௌரவப் பட்டம் வழங்குவார்கள். பலர் அதற்காகப் பாடுபடுவார்கள். முஸ்லீம் மதத்தின் ஒரு பிரிவினர், தாங்கள் இறந்த பிறகு தங்கள் சமாதி பெரிய மண்டபமாகக் கட்டப்பட வேண்டும் என்பதற்காக வாழ்நாள் முழுவதும் பாடுபடுவார்கள். குழந்தை பிறந்த உடனே அதற்கான சமாதியைக் கட்டி விடுகின்ற ஒரு பிரிவினரைக்கூட எனக்குத் தெரியும். அவர்களைப் பொறுத்தவரை ஒரு மனிதன் செய்ய வேண்டிய மிகப் பெரிய செயல் சமாதி கட்டுவதுதான். சமாதி எவ்வளவுக்கு எவ்வளவு பெரியதாகவும் அழகாகவும் இருக்கிறதோ, அந்த அளவுக்கு அந்த மனிதன் சிறந்தவனாகக் கருதப்படுவான்.